# தமிழர் பண்பாட்டு ஆய்வுகள்



PUDU BOOKS

பாஞ். இராமலிங்கம்

# தமிழர் பண்பாட்டு ஆய்வுகள்

(13ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாட்டுக்
கட்டுரைகளில் சில)

பதிப்பாசிரியர்
முனைவர் **பாஞ். இராமலிங்கம்**

PUDU BOOKS

**புதுச்சேரி கூட்டுறவுப் புத்தகச் சங்கம்**
புதுச்சேரி

Publication serial No. 109/2018

| | |
|---|---|
| Title | : Thamizhar panpattu Aivugal |
| Edition | : First Edition, February 2018 |
| Editor | : Panch Ramalingam. |
| Pages | : 264 |
| Printed at | : Tirumalai offeset printers<br>Chennai |
| Published by | : Puducherry Co-op. Book Society<br># 17, 14th Street, Krishna Nagar,<br>Puducherry - 605 008 |

ISBN : 978-81-933581-8-4

| | |
|---|---|
| Price | : ₹. 300/- |
| Layout | : Magizham Graphics, Puducherry. |


© All rights reserved. No part of this book may be reproduced or retrieved or photocopied in any form excepting for the purpose of reference or research without prior permission of the editor.

# 10. உலக மயமாக்கலில் இந்து சமயம் எதிர்நோக்கும் சவால்களும் முன்னெடுப்புகளும்.

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன்,
முதுநிலை விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்

**ஆய்வுச்சுருக்கம்:-**

இன்றைய அறிவியல் தொழில்நுட்ப யுகத்தில் கடந்த சில தசாப்தங்களாக உலகமயமாக்கல் முனைப்புப்பெற்று வருகின்றது. உலகமயமாக்கல் என்பது உலகநாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயல்பாடாகும். அது பொருளாதார, தொழில்நுட்ப, கலாசார மற்றும் அரசியல் பிணைப்புக்கள் ஊடாக உலகமக்களை மிக அருகில் எடுத்துவருவதுடன், அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையையும் அதிகரிக்கச் செய்கின்றது. இதில் கலாசார உலகமயமாக்கலில் பண்பாடு மையவிசையாய் அமைகின்றது. அந்தவகையில் இந்துப்பண்பாடு சார் ஆய்வில் இந்துப்பண்பாட்டின் ஒருகூறாகிய இந்துசமயம் உலகமய மாக்கலில் முக்கியப்படுத்தப்படுகின்றது. உலகமயமாக்கலினால் இந்து சமயம் எதிர்நோக்கும் சவால்களை இனங்காணுதலும் இந்துசமயத்தை மேம்பாட்டையச் செய்வதற்கான முன்னெடுப்புக்களை எடுத்துரைப்பதும் இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. உலகமயமாக்கலினால் கிரியைகள், வாழ்வியல், திருக்கோயில்கள், கல்வி போன்ற இந்துசமயக் கூறுகள் சவால்களை எதிர்நோக்குகின்றன என்பது இவ்வாய்வின் மூலம் இனங்காணப்பட்டுள்ளன. விபரண மற்றும் பகுப்பாய்வு முறைகளில் மேற்கொள்ளப்படுவதுடன், இவ்வாய்வுக்கான தரவுகள் களஆய்வு மூலம் வெளிக்கொணரப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்**

உலகமயமாக்கல், இந்துசமயம், வாழ்வியல், திருக்கோயில்கள்.

## இந்து சமயம் - அறிமுகம்

இந்துசமயம் எனும் சொல்விளக்கம் பற்றி அறிஞர்களிடையே

பல்வேறு கருத்துக்கள் நிலவிவருகின்றன. இந்து எனும் பதமானது இந்துநதிக்கரையில் வாழ்ந்த இந்தியமக்களைச்சுட்டிய ஒருபொதுப் பெயராக திகழ்ந்தமையைக் காணலாம்.[1] மேலும், தென்னாசியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல்வகைப்பட்ட இனங்கள் மத்தியில் நிலவிவந்த பலவழிபாட்டு முறைகளும் தத்துவங்களும் காலப்போக்கில் இணைந்து இந்துமதம் எனும் பெயரைப்பெற்றது.[2] அடுத்து, சமயம் என்பது புனிதமான ஒன்றைப்பற்றிய நம்பிக்கைகளும், செல்முறை களும் அடங்கிய ஒரு ஒழுங்கமைந்த முறையாகும் என எமிலிதர்கைம் குறிப்பிடுகின்றார்.[3] மேலும் சமயம் என்பது ஒரு வாழ்க்கை நெறி என இராதாகிருஷ்ணன் குறிப்பிடுகின்றார்.[4] இவ்வகையில் சிறப்புப்பெறும் இந்துசமயம் உலக சனத்தொகையில் 15%மும் (950 மில்லியன் மக்கள்), இலங்கையில் மொத்த சனத்தொகையில் 15%மும், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 86% க்கு மேற்பட்ட மக்களினால் பின்பற்றப்பட்டு வருவதுமாகும்.[5]

### உலகமயமாக்கல் எண்ணக்கரு விளக்கம்:

உலகமயமாக்கல் என்ற எண்ணக்கருவானது தற்போது உலகமட்டத்தில் பேசப்பட்டுவரும் ஒருவிடயமாக மாற்றமடைந்துள்ளது. உலகமயமாக்கல் என்ற பதம் 1960களில் முதல்முதலாகப் பயன் பாட்டுக்கு வந்தது. 1961இல் Webster என்ற அகராதியே Globalism and Globalization என்ற சொற்களுக்கு வரையறைகளை முன்வைத்த முதலாவது அகராதி ஆகும்.[6] கடந்த நான்கு தசாப்தகாலத்தில் இப்பதம் வலுவடைந்து இன்று மிகவும் எழுச்சியுற்று எல்லோரினாலும் பிரயோகிக்கப்படும் ஒரு செயற்பாடாக மாறியுள்ளது.

உலகமயமாக்கல் என்ற எண்ணக்கருவானது பல்வேறு துறைசார்ந்த அறிஞர்களாலும் வேறுபட்டவகையில் வரைவிலக் கணப்படுத்தலுக்குட்பட்டாலும் இப்பதத்தின் விரிவு காலநீட்சிக்கு ஏற்ப விரிவுபட்டுச்செல்லும் பதமாகவோ அல்லது மாற்றமடைந்து செல்லும் பதமாகவோ உள்ளது எனச் சொலோன் (Alfread . P. Sloan) குறிப்பிட்டுள்ளமையை நோக்கும் போது உலகமயமாக்கல் தொடர்பாகத் தீர்க்கமான வரையறை ஒன்றை முன்வைப்பது கடினம் என்பது புலனாகின்றது எனினும், பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற எண்ணக்கருக்கள் சிலவற்றை எடுத்து நோக்கலாம்.

ஆண்டனி கிடன்ஸ் (இயக்குநர், இலண்டன் பொருளாதாரப்பள்ளி) எனும் அறிஞர்,

**"தொலைவிலிருக்கும் இடங்களையும் இணைக்கின்ற பலமைல்களுக்கு அப்பால் நிகழும் சம்பவங்களால் உள்ளூர் நிகழ்வுகள் உருவமைக்கப்படுகின்ற (இதற்கு மறுதலையும் உண்மை) உலகஅளவிலான சமூக உறவுகளின் தீவிரப்படுத்தல்"** [7]

என உலகமயமாக்கல் எனும் எண்ணக்கருவை வரையறுக்கின்றார். இங்கு உள்ளூர் நிகழ்வுகள் மிகத்தொலைவில் நிகழும் சம்பவத்தைப் பாதித்தல் அதேபோன்று தொலைவில் நிகழ்வது உள்ளூரில் பாதிப்பை எற்படுத்துவது என்ற வகையில் உள்ளூர் மயமாக்கல் -உலகமயமாக்கல் என்பன ஒன்றில் ஒன்றை மறைமுகமாக உள்ளடக்கியுள்ளன என்ற பொருளில் வரையறை செய்கின்றார்.

ஜேம்ஸ் மிட்டல்மேன் (சர்வேச உறவுகள் துறைப்பேராசிரியர், அமெரிக்கன் பல்கலைக்கழகம்)

**"சமூக உறவுகளின் காலம், இடம் ஆகிய கூறுகளை உலகமயமாக்கல் அழுத்திச் செறிவூட்டுகின்றது."** [8] என்கிறார்.

இங்குக் காலத்தையும் இடத்தையும் சுருக்கிவிடல் எனும் பொருளமைதியில் உலகமயமாக்கத்தினை வரையறுக்கின்றார்.

வோட்டர்ஸ் (Warders)

**"சமூக மற்றும் கலாசாரச் செயற்பாடுகள் மீதானதும் சர்வதேச பொருளாதார முறைகளில் ஒன்றான சமவுடமை முறை பின்தள்ளப்பட்டுள்ள பொருளாதார நடவடிக்கைகள் மீதானதுமான புவியியல் ரீதியான இடையூறுகள் மற்றும் இறுக்கங்கள் தளர்வடையும் அல்லது தளர்த்தப்படும் செயற்பாடே உலகமயமாக்கம்"** [9]

எனக் குறிப்பிட்டுள்ளார்.

## உலக மயமாக்கலின் பரிமாணங்கள்:-

உலக மயமாக்கல் தற்காலச் சமூக வாழ்க்கையில் பல்வேறு தளங்களிலும் ஆழமாக ஊடுருவிச் செல்கின்றது. அவை பொருளாதார, அரசியல், கலாசார, தொழில்நுட்ப ஊடக மற்றும் சுற்றுச் சூழல் எனப்பல பரிமாணங்களுடன் செல்வாக்குற்றுத் திகழ்கின்றன.

## பொருளாதார உலகமயமாக்கல்

பொருளாதார உலகமயமாக்கல் எனும் போது உலகளவிலான பொருளாதாரச் சார்பிலான உறவுகளைத் தீவிரப்படுத்தலும், அவற்றின் பரப்பை விரிவுபடுத்தலும் எனும் இரண்டு செயற்பாட்டையும் நோக்கியதாக அமையும். அனைத்து நாடுகளினதும் பொருளாதார ஒருங்கிணைப்பாகவும், தேசிய சந்தைகள் ஓர் உலகளாவிய சந்தையில் ஒருங்கிணையும் ஒரு செயன்முறையாகப் பொருளாதார உலக மயமாக்கல் அமைகின்றது.

மேலும், பொருளாதார உலகமயமாக்கல் முனைப்புப்பெற மூலதனப்பாய்ச்சல், போட்டிச் சந்தையின் நன்மைகள், பனிப்போரின் முடிவு, பல்தேசியக் கம்பனிகளின் தீவிர வளர்ச்சி, தொடர்புச் சாதனம், மின்னியல், தகவல் தொழில்நுட்பவியல் என்பவற்றின் அதீத வளர்ச்சி, மாறிவரும் பொருளாதாரச் சிந்தனைகள் மற்றும் யூரோ நாணயம் உலகச் சந்தையில் நுழைந்தமை போன்ற காரணங்கள் முக்கியம் பெறுகின்றன.

இன்று பொருளாதார உலகமயமாக்கல் துரிதகதியில் உலகளாவிய அளவில் தன்வீச்செல்லைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் வேளையில் வலிமைபெற்ற நாடுகள் மற்றும் நிறுவனங்களின் நிபந்தனைகள், முடிவுகளின் அடிப்படையிலேயே பொருளாதார வளங்குன்றிய நாடுகளின் கொள்கைகள் மாற்றப்பட வேண்டியுள்ளது. இதனால் வளர்முகநாடுகள் அனுகூலமான பாதையைத் தமக்கென வகுப்பதில் ஆற்றலின்றித் தடுமாறுகின்றது.

## அரசியல் உலகமயமாக்கல்:

அரசியல் உலகமயமாக்கலானது காலத்திற்குக் காலம் கூர்ப்படைந்து, அரசியல் முறைமைகள், அரசின் தன்மைகள் மாற்றமடைந்து வந்துள்ளன. குறிப்பாகத் தேசிய அரசுகளின் அதிகாரங்கள் பலமிழக்கலாயின, அரசின் இறைமை இழந்து வருகின்றமை, சர்வதேச மனித உரிமைகளைப் பேணும் நோக்குடன் ஒருங்கிசைவான உடன்பாடு, முரண்பாடு, வன்முறையற்ற உலகினை உருவாக்குதல், அரசியல் சமாதானம் மிக்க உலக ஒழுங்கினைப் பேணுதல் போன்ற அரசியல் சார் விடயங்கள் உலகளாவிய ரீதியில் பின்பற்றிக்கொண்டிருப்பதை நோக்கமுடிகின்றது.

**"அரசியல் உலகமயமாக்கலின் இறுதி விளைவு என்பது உலகமயப் பரந்த நோக்குடைய குடியரசு ஒன்றின்**

**எழுச்சியாக இருக்கும். இக்குடியரசு பரஸ்பர சகிப்புத்தன்மை, பரஸ்பர பொறுப்புத்தன்மை இவைசார்ந்த அமைப்புக்குள் செழித்துவளரும் பன்முக அடையாளங்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய அடிப்படையாக இருக்கும்."**[10]

மான் ஃபிரட் பிஸ்டெகர் எனும் அறிஞரது மேற்கூறப்பட்ட கருத்து, பூமி என்ற எல்லைக்குள் மனிதர் என்ற பிரஜாவுரிமையோடு வாழ்தலுக்கு இட்டுச் செல்லும் என்று எதிர்வுகூறலாம்.

அரசியல் உலகமயமாக்கல் எனும் போது ஜனநாயகம், மனித உரிமைகள், சமாதானம், அடிப்படைச்சுதந்திரம், ஆண் பெண் பால் சமத்துவம், நல்லாட்சி மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் பெருக்கம் என்ற வகையில் கருதப்படுகின்றது.

**கலாசார உலகமயமாக்கல்:**

கலாசார உலகமயமாக்கல் என்பது கலாசாரப் பாய்வுகளின் தீவிரப்படுத்தலும், விரிவுபடுத்தலும் ஆகும். கலாசார பன்முகத் தொடர்புகள், பன்முகச்சார்புகள் ஆகியவற்றின் விரைந்து விரியும் வலைப்பின்னலை நோக்கிய அறிஞர்கள் உலகமயமாக்கலின் இதயமாக இருப்பது கலாசாரச் செயல்முறைகளே என்று கூறியுள்ளார்கள்.[11] சமகால கலாசாரப் பரவல்களின் அளவும், பரிமாணமும் இதற்கு முந்திய காலங்களைவிட வேகமாகத் தேசங்களைக் கடந்து சென்றுவிடுகின்றன. இம்மாற்றங்கள் கலாசார அதிர்ச்சியினை ஏற்படுத்திவிடுகின்றன. அதாவது குறித்த ஒரு சமூகம் பின்பற்றிய கலாசாரத்திலிருந்து இன்னுமோர் கலாசாரத்திற்கு அசைகின்ற போது கலாசார அதிர்ச்சி ஏற்படுகின்றது. இவ்வதிர்ச்சி மக்களிடையே இரண்டறக்கலத்தல், அந்நியமயமாதல், எல்லை மனிதர்களாக நின்று அல்லல்படுதல் எனும் மூன்று வகையான மனப்பாங்கினை உருவாக்குகின்றது.

கலாசாரத்தின் கூறுகளில் ஒன்றாகிய மொழிகளின் உலகமயமாக்கல் என்பது சர்வதேசத் தொடர்புச் செயலில் சிலமொழிகள் மட்டுமே அதிகமாகப் பயன்படுத்தப்படுவதோடு பிறமொழிகள் தங்கள் முதன்மையை இழத்தலையும், இன்னும் பல மொழிகள் பேசுவோரின்றி மறைவதையும் காட்டுகின்ற ஒரு செயல்முறையாகும்.

கலாசார உலகமயமாக்கலானது நீளுதல், சிதறிப்பாய்தல், ஆழமாக்கப்படுதல் எனும் வழிமுறைகளில் இடம்பெறுகின்றது. இதில்

நீளுதல் என்பது கலாசாரமானது கிராம நகர எல்லைகளைக்கடந்து பரவுதல் ஆகும். சிதறிப்பாய்தல் என்பது ஒரு கலாசாரத்தின் தூய்மையான பெறுமதி உலகமயமாக்கலில் தூய்மை கெட்டு வேறு பரிமாணத்தில் செல்லுதல். ஆழமாக்கப்படுதல் என்பது உலகமய மாக்கலினால் செல்வாக்குள்ள கலாசாரப் பண்புகள் மேலும் தீவிரமாக்கப் படுதலாகும்.

## உலகமயமாக்கலில் இந்துசமயம் எதிர்நோக்கும் சவால்கள்.

தொன்மையும் சிறப்பும்மிக்க சனாதனதர்மம் எனப்படும் இந்துசமயம் உலகமயமாக்கலினால் பல சவால்களை எதிர்நோக்கு கின்றது. இந்துசமயமானது தனது பூர்விக பூமியில் தனது காலதேச வர்த்தமானங்களுக்கேற்பச் சில நெகிழ்வுடன் காலத்திற்குப் பொருத்தமற்றவற்றைக் களைந்து தனது இருப்பினை மேலும் பலப்படுத்துகின்றதோடு தீவிரத்தன்மையுடைய இயக்கங்களும் தோற்றம்பெற்றுச் செயற்பட்டு வருகின்றன. மேலைநாடுகளில் மனித நேயம், அன்பு, தியானம், யோகாசனம், பஜனை என்பவற்றினூடாக இந்துசமயக்கருத்துக்களை உரைத்துவருகின்றனர். அமெரிக்கா ஹல்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் பல்சமய ஒப்பீட்டுக்கற்கை நெறிகளுக்கான பேராசிரியை லிஸ் மில்லர் என்பவர் "நியூஸிகக்" பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில்,

> **"அமெரிக்கா உலகிலேயே செல்வச்செழிப்புள்ள பகட்டான, வல்லரசான கிறிஸ்தவ தேசமென்பது யாவரும் அறிந்தது. இந்நாளில் தியானம், நிஷ்டை, நியமம், யோகா என்ற கருத்துக்களின் ஊடாக இந்துசமயம் வேகமாகப் பரவிவருகின்றது"**[12]

என்று குறிப்பிட்டுள்ளமை இந்துசமயம் உலகளாவிய நிலையில் சிறப்புற்று விளங்குவதைக் காட்டுகின்றது.

மனிதகுலத்தை நலமாக்குவதற்காக உருவாக்கப்பட்டதே உலகமயமாக்கம் என்ற கோட்பாடு எனக் கூறப்பட்டாலும் இந்துசமயம் பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது. அந்தவகையில் இந்து ஆலயங்கள், இந்துசமயக் கல்வி, இந்துசமய வாழ்வியல் போன்ற கூறுகள் அதிக தாக்கத்திற்குள்ளாகியுள்ளன.

## இந்து ஆலயங்களும் உலகமயமாக்கலும்.

இந்துசமயத்தினை வளர்த்தெடுப்பதில் ஆலயங்களின் பங்கு

அளப்பரியது. உலகமயமாக்கலினால் இந்து ஆலயங்கள் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றன.

உலகமயமாக்கல் தாக்கத்தினால் இன்று இந்து ஆலயங்களின் வளர்ச்சி நிலையில் பல்வேறு பிரச்சினைகள் புதிய வடிவில் எழுந்துள்ளன. இதனை எதிர்கொள்ள முடியாத ஒரு தளர்வு நிலை காணப்படுகின்றது. குறிப்பாக, கடந்த மூன்று தசாப்தகாலமாக யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்கள் பல வழிகளிலும் பாதிப்படைந்து வந்துள்ளன. இக்காலத்தில் நிலவிய யுத்தம், அகதி வாழ்க்கை, பட்டினிச்சுமை, அதிர்ச்சி, சோகம், பயம், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம், ஆகியவற்றால் நலிவடைந்துள்ள இந்துக்களது வாழ்வியல் அவலங்கள், அதன் விளைவாக இந்துக்களது சிந்தனைத் தெளிவின்மை போன்ற காரணங்களினால் சமூகப் பெறுமானங்கள், விழுமியங்கள் வலுவிழக்கப்படவும், மீறப்படவும் தூண்டுதல் அளித்தன. இவ்வாறான நலிந்த சமூக, பண்பாட்டு சூழ்நிலையில்தான் இந்து ஆலயங்கள் பெரும் பிரச்சினைகளை உள்வாங்க நேரிட்டது.

உலகமயமாக்கலின் விளைவாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பொதுவாக இந்து ஆலயங்கள் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகளான,

### ஆலயநிர்வாகச் சீர்கேடுகள்

1. சமகாலத்தில் ஆலயங்கள் பல புலம்பெயர்வாழ் மக்களின் பெருமளவு நிதியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. அதேவேளை வரவு செலவு அறிக்கைகள் ஒழுங்காகப் பேணப்படாததன் காரணத்தினால் நிதி, நிர்வாக துஷ்பிரயோகங்கள் நடைபெறுவதையும் காணமுடிகிறது. இதனால் நிர்வாகத்திற்கும் - திருப்பணிச் சபைக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.
2. ஆலய நிர்வாகத்தெரிவில் வயது, பணம், சாதி, அந்தஸ்து போன்ற காரணிகள் அதீதசெல்வாக்குச் செலுத்துவதினால் ஆத்மீகத்துவமும், சமூக ஈடுபாடும் கொண்ட வினைத்திறமை வாய்ந்த நிர்வாகத்தைத் தெரிவு செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது.
3. அந்தணர்கள் பலர் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவதினாலும், புலம் பெயர்ந்து பிற நாடுகளுக்குச்

செல்வதினாலும் அந்தணர் பற்றாக்குறை ஏற்படுகின்றது. அத்துடன் நிர்வாகத்தினால் சிவாச்சாரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் இன்றைய பொருளாதார வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இல்லை. இக்காரணங்களினால் ஓர் அந்தணர் பல ஆலயங்களில் பணியாற்ற வேண்டியுள்ளது. இதனால் பூஜை ஒழுங்குகளை உரியவாறு பேணமுடியாத நிலை ஏற்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் சிவாச்சாரியர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்படுகின்றது.

4. வேதாகமத்தை நன்கு பயில வேண்டும் என்பதில் அக்கறையின்மையும், ஒழுக்கத்தில் பிறழ்வும் காணப்படுவதினால் அந்தணர் ஒரு சிலருக்குச் சமூகம் உரிய அந்தஸ்தை வழங்கத் தவறுகின்றது. இவ்வாறான நிலைகளில் 'பூசகர் பதவிக்கு ஒழுக்கமும், திறமையும் உள்ள பிராமண குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தேவை' எனப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தி பூசகர் தெரிவு செய்யப்படுவதை இன்று காணமுடிகின்றது.

## ஆலயதிருப்பணி வேலைகளில் ஒழுங்கு பேணப்படாமை

1. ஆலயத்திற்கு ஆலயம் திருப்பணி வேலைகள் அதிதீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் பிரச்சினைகளும் அதிகரித்தவண்ணமே உள்ளன. ஆரம்ப காலங்களில் ஆகம, சிற்ப சாஸ்திரம் நன்கு பயின்ற, அனுபவம் வாய்ந்த ஸ்தபதி பரம்பரையினர் ஆலயங்களை அமைத்தனர். உலகமயமாக்கல் செயல்பாட்டினால் சாஸ்திர அறிவு பெரிதும் எதிர்பார்க்கமுடியாத ஒப்பந்தக்காரர் இனம், மதம், மொழி வேறுபாடின்றி யாவரையும் உள்வாங்கிய நிலையில் திருப்பணி வேலைகள் நடைபெறுகின்றன.

2. புலம்பெயர் வாழ் இந்துக்களின் பெருந்தொகையான பணவரவினால் அசௌகரித்தை ஏற்படுத்தும் வகையில் மாபிள் பதித்தல், காற்றோட்டம் இல்லாதவகையில் கூரைக்குச் சீற் போடுதல், பக்தர்கள் அமைதியாக இருந்து வழிபாடு செய்யமுடியாத வகையில் அளவுக்கதிகமான அலங்காரத் தூண்கள் அமைத்தல் போன்ற முறையற்ற ஆலய நிர்மாணங்கள் இடம்பெறுகின்றன.

**கிரியைகள், விழாக்கள், விரதங்கள் என்பவற்றை உரியவாறு முறைமையாகப் பேணாது இருத்தல்.**

1. அறிவியல் ரீதியில் கணிக்கப்படும் திருக்கணித பஞ்சாங்கம், ரிஷிகளின் வாக்கால் அமைந்த வாக்கிய பஞ்சாங்கம் எனும் இருபஞ்சாங்க நடைமுறையில் கணிப்பு வித்தியாசப்படுகின்றது. இதனால் எவ்விழாவாயினும் ஆலயங்களில் இரு முறை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஆலயத்திற்கு ஆலயம், மக்களுக்கு மக்கள் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவதுடன், பிறமதங்களின் விமர்சனமும் ஏற்படுகின்றது.
2. மக்கள் இயந்திர வாழ்க்கை வாழ்வதுடன், அதிகரித்த பொழுது போக்கு வசதிகளினால் பல ஆலயங்களுக்குப் பக்தர்களின் வருகை மிகவும் குறைந்து விட்டது. இதனால், திருவிழாக் காலங்களில் கூட சுவாமி திருவீதி உலாவரும் போது விதி முறைகளை மாற்றவேண்டிய நிலையும், பக்தர்களின் வருகைக்காகக் காத்திருக்க வேண்டிய நிலையும் காணப் படுகின்றது.
3. ஆலய பக்தர்களின் ஒழுங்கீனமான செயல்பாடுகளினால் ஆலயங்கள் பல சவால்களை எதிர்நோக்கியுள்ளன. இளம் வயதினரின் ஆடை அணிகலன்களின் ஒழுங்கீனமும், ஆலய வெளிப்புற வீதியில் அதிக நேரத்தைச் செலவு செய்வதாலும் கலாசாரச் சீரழிவுக்கு உட்படுவதைக் காணமுடிகின்றது. பூஜை வேளைகளில் கதைத்தல், கைத்தொலைபேசிப் பாவனை, பெண்கள் ஆலயங்களுக்கு அதிக நகைகளைப் போட்டு வருதல் போன்ற காரணங்களினால் உளவியல் தாக்கம் ஏற்படுகின்றது.
4. பக்தர்கள் ஆலயங்களுக்கு வரும் போது அர்ச்சனைப் பொருட்களை ஆசாரமுறையில் கொண்டுவருவதில்லை. இன்று சூழலை அச்சுறுத்தும் ‘சொப்பிங் பையில்’ அர்ச்சனைப் பொருட்களும், ‘பிளாஸ்ரிக் போத்தலில்’ பால், தயிர் கொண்டு வருதலும் முக்கியப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.
5. இறைவன் ஆலய வெளிவீதி சுற்றிவரும் போது இடம்பெறும் தவில் - நாதஸ்வரக் கச்சேரியின் போது சினிமாப் பாடல்கள் வாசிக்கப்படுகின்றமை முக்கியப் பிரச்சனையாக உள்ளது.
6. ஆத்மீக உள நலத்திற்கான செயல்பாடுகளான பிரசங்க மரபு,

நற்சிந்தனை கூட்டுப்பிரார்த்தனை என்பன ஆலயங்களில் அருகிவருகின்றன

7. ஆலயங்களுடன் இணைந்திருக்கும் திருமண மண்டபங்களினால் ஆசாரசீலமற்றவர்களும் மண்டபத்திற்குச் செல்வதினால் சைவ விழுமியங்களை ஆலயங்கள் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
8. திருவிழாக் காலங்களில் இடம்பெறும் வாணவேடிக்கைகள், ஒலி பெருக்கிகள் என்பன களியாட்ட நிகழ்வுகளாக அமைந்து, சைவ விழுமியத்தைப் பாதிப்படையச் செய்கின்றன.
9. சமீபகாலங்களில் ஆலயங்களில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்தமை இந்துக்களது மனதைப் புண்படுத்துகின்ற செயலாகவும், ஓர் அச்சுறுத்தலாகவும் அமைகின்றது. ஆலய உண்டியல்கள் உடைக்கப்படுகின்றன, ஆலயக்குருவின் இல்லத்தில் களவு, கொலை நடைபெறுகின்றது, பக்தர்களின் பெறுமதி மிக்க உடைமைகள் திருடப்படுகின்றன, ஆலயங்களின் மதிப்புமிக்க விக்கிரகங்கள், வாகனங்கள் சேதமாக்கப் படுகின்றன, அல்லது திருடப்படுகின்றன.
10. குடியிருப்புக்களின் விரிசல்களினால் ஆலய வீதிகளின் அளவு குறைக்கப்பட்டு, சுவாமி வீதிவலம் வருவதில் பாதிப்பு ஏற்படுகின்றது. தற்பொழுது பெருவீதிகளின் அகலிப்பு நடவடிக்கையினால் பல இந்து ஆலயங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளன.
11. நகர நிர்மாண வேலைத் திட்டங்களினால் பாரம்பரிய, புனித இடங்கள் அழிக்கப்படுதல் என்பன இனம் காணப்பட்டுள்ளன.

எமது நாளாந்த வாழ்க்கையில் உலகமயமாக்கல் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தபோதிலும், இந்து ஆலயங்களில் அவற்றின் செல்வாக்கைத் தவிர்க்க அல்லது குறைக்க ஒவ்வொரு இந்துவும் சிந்தித்துச் செய்படுவதன் மூலம் தொன்மையான இந்துமதத்தைப் பேணிப் பாதுகாக்க முடியும். அதாவது உலகமயமாக்கலின் நல்ல அம்சங்களை உள்வாங்கி வளர்த்தெடுக்க வேண்டும்.

## இந்துசமயக்கல்வியும், உலகமயமாக்கலும்

கல்வி சமயத்தின் அடிப்படையில் வளர்த்து எடுக்கப்பட வேண்டும் என்பதை அறிஞர்கள் எடுத்துக்கூறியுள்ளனர். ஜேம்ஸ் ரோஸ் (James Rose) எனும் அறிஞர்,

> **"வளர்ந்து வரும் மக்கட் சமுதாயத்தில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி, அரசியல் தவறுகளால் மனிதனிடம் ஏற்படக்கூடிய மிருகப்பண்புகளைக் களைந்தெறிவதற்குக் கல்வி சமயத்தின் அடிப்படையில் வளர்த்து எடுக்கப்படவேண்டும்".**[13]

என்கிறார். ஜேம்ஸ் ரோஸின் இக்கருத்து அரசியல் தவறுகளால் எம்மக்களிடம் ஏற்பட்ட தவறான பண்புகளைக் களைந்தெறிவதற்குக் கல்வி சமயத்தின் அடிப்படையில் வளர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், அவசரத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

1. உலகமயமாக்கலினால் எமது பிரதேசக் கல்விச்சமூகத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நடத்தைக்கோலங்கள் இந்து சமய, பண்பாட்டு விழுமியங்களைப் பெருமளவுக்குப் புறந்தள்ளிய தாகக் காணப்படுகின்றது. மாணவர்கள் மத்தியில் சமய, அறநெறிகளின் பிறழ்வே இன்றைய சமூக, கலாசாரச் சீர்கேடுகளுக்குக் காரணமாகும்.
2. மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை, வன்முறை சிந்தனைகள் அதிகரிப்புக்கு உலகமயமாக்கல் காரணமாக அமைகின்றது.
3. கல்வித் திட்டமானது எமது வாழ்வியல் செல்நெறிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை விட பரீட்சையை நோக்காகக் கொண்டு அமைவது இந்துசமயக் கல்வி பின்னடைவுக்குக் காரணமாக அமைகின்றது எனலாம்.
4. உலகமயமாக்கல் சிந்தனையால் பாடசாலைக் கல்வித் திட்டத்தில் அறிவியல்சார்ந்த பாடங்களுக்கு (தொழில்நுட்பம், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்.....) அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. எமது வாழ்வைச் செம்மைப்படுத்தும் சமயக் கல்விக்கு உரிய இடம் கொடுக்காமை சமூகத்தின் பின்னடைவிற்கு ஒரு காரணமாக அமைகின்றது.

> **"இன்றைய கல்வி முறையானது உள்ளத்தைப் புத்தக உள்ளடக்கத்தால் நிரப்புவதும் பரீட்சை மண்டபத்தில் அவற்றினை வெளியேற்றி விடுதலும், பின்னர் வெற்று உள்ளத்தோடு வீடு திரும்புவதாகவும் அமைகின்றது. உண்மைக் கல்வி உள்ளத்தைப் பண்படுத்துவதனைத் தன்னகத்தே கொண்டுள்ளது."**

என மனித மேம்பாட்டுக் கல்வி விழுமியம் பற்றிச் சாயிபகவானும் விளக்கியுள்ளார்.

இன்றைய உலகமயமாக்கல் செயற்பாட்டினால் நம் நாட்டுக் கல்விக்கொள்கை மேலைத்தேச மற்றும் வேலைவங்கியை அடிப்படையாகக் கொண்டுள்ள போதிலும் சமயம் சார் மனிதநேயக் கல்வியினை உள்வாங்கிச் சிறந்த ஆரோக்கியமான மாணவச் சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

## இந்துசமய வாழ்வியலும், உலகமயமாக்கலும்

1. சமய வாழ்வியலில் விருந்தோம்பல் என்பது பண்பாட்டு நடைமுறையாகப் பின்பற்றப்பட வேண்டிதொன்றாகும். ஆனால், உலகமயமாக்கலின் விளைவாகப் பண்பாட்டு விருந்தோம்பல் என்ற வரையறையைத் தாண்டி வணிக விருந்தோம்பலாக விரிவுபெருவதை அவதானிக்க முடிகின்றது. இன்று விருந்தோம்பல் என்பது நாட்டில் தொழில்துறைச் சேவையாகவும், உணவகங்கள், சூதாட்டக்களங்கள், சுற்றலாவிடுதி ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைகின்றது.
2. மேலும் உலகமயமாக்கலின் பின்னணியில் அதிகம் செல்வாக்குற்று வருவது விரைவு உணவுகளாகும். இவ்வாறான விரைவு உணவுகளின் மோகத்தினால் 'உணவே மருந்து, மருந்தே உணவு' என்ற உளப்பாங்கு தொலைந்து விட்டது. தரையில் அமர்ந்து வாழையிலை இட்டு ஆரோக்கியமான அறுசுவைகளை உண்ணும் காலம் அருகிக்கொண்டே வருகின்றது.
3. 'கூடிவாழ்ந்தால் கோடிநன்மை' என்பது முதுமொழி. ஆனால், இன்று உலகமயமாக்கலினால் கூட்டுக்குடும்ப வாழ்வு மறைந்து போய்விட்டது. நமது முன்னோர்கள் நிலாமுற்றத்தில் கூறிய பஞ்சதந்திரக் கதைகள், புராண, இதிகாசக் கதைகள், விக்கிரமாதித்தன் கதை என்பவற்றைக்கூறி அதனூடாக வாய்மை, நீதி, நேர்மை எனப்பல விடயங்களைப் புகட்டினர். இத்தகைய வாழ்வியல் கருத்துக்கள் எதிர்காலச் சந்ததியினருக்கு அறிமுகப்படுத்தப்படாமலேயே மறைந்துபோகின்றது.
4. உலகமயமாக்கலினால் பெற்ற தாய் தந்தையரை முதியோர் இல்லங்களுக்குச் சேர்க்கும் செயற்பாடு அதிகரித்து வருவதினால் எமது பிரதேசத்தில் முதியோர் இல்லங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

5. இன்று உணவு ஒழுக்கத்தில் புலால் உணவின் வேட்கை பலம்பெற்றுள்ளது. மாட்டிறைச்சிக்கடைகள் வீதிவீதியாகக் காணப்படுகின்றன. சுவாமி ஞானப்பிரகாசர் ஒருபசுவைத் தானம் செய்ய மறுத்து நாடு துறந்த சமயவாழ்வியல் மறக்கப்பட்டுவிட்டது.

6. இந்துக்களின் இதிகாச, புராணப் பெருமைகளைப் பேசுகின்ற பண்டிகைகளும், கொண்டாட்டங்களும் இன்று வெறும் சம்பிரதாயங்களாகிவிட்டன. எதற்காகக் கொண்டாடப்படுகின்றது என்ற புரிதலின்றிக் கேளிக்கைகளாகவும், களியாட்டங்க ளாகவும் அவை மாறிக்கொண்டிருக்கின்றன.

7. மேலைநாட்டு மோகத்தினால் இளம்தலைமுறையினர் நடை. உடை, பழக்கவழக்கங்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி யுள்ளனர். ஆடை மாற்றங்களுக்கு ஏற்ப தமது உள்ளச் சிந்தனைகளையும் மாற்றிக்கொண்டு கலாசார சீர்கேடு களுக்குத் துணைபோகிறார்கள். கைப்பேசி போன்ற தொழில்நுட்பச் சாதனங்கள் உலகமயமாக்கலை விரைவு படுத்துவதைப் போன்றே இந்துசமய வாழ்வியல் சிதைவுகளையும் வேகப்படுத்துகின்றன.

8. இன்று பூகோளரீதியாகப் பண்பாடுகளில் உலகமயமாக்கல் ஏற்படுத்துகின்ற தாக்கங்களில் ஒன்று **கூட்டுப்பண்பாடாகும்**. கோர்விற் (Corbit) என்பவரது கருத்துப்படி வர்த்தக உடன்படிக்கைகளும், பரவலாக்கப்பட்ட தொலைத் தொடர்புகளும் தனித்துவமான பண்பாட்டைக் கலைத்து, கூட்டுப்பண்பாடுடைய தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற நிலைக்கு கொண்டுவருகின்றன. இன்றைய உலகில் இளைய தலைமுறையினரின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றதாக அமைவதும் கூட்டுப்பண்பாடேயாகும். MTV, Eurostar, மக்டொனலட், டிஸ்னி, மல்பரோ, கொக்கோகோலா, பீட்ஸா என்பவற்றைக் குறிப்பிடலாம்.

9. உலகம் கலாசார கடன் வாங்குதல்களால் **கலாசாரக் கலப்புத்தன்மை** உருவாகின்றது. இன்று எமது கலாசாரமானது மேலைத்தேச இசை, உணவுவகைகள், உடை மற்றும் அலங்காரங்கள், மருத்துவ முறைகள் எனபவற்றைக் கடனாக வாங்கி மேலைத்தேச நாடுகளுக்குத் தியானம், யோகா, ஆயுள்வேதம், சைவ உணவு முறை என்பவற்றை வழங்கியுள்ளது.

10. மேலைத்தேச ஆங்கில, ஹொலிவூட் திரைபடங்களைப் பார்க்கும் எம்மக்கள் தாமும் அத்திரைப்பட நடிகர்கள் போன்று நடை, உடை பாவனைகளை மாற்றிவருகின்றார்கள் குறிப்பாக ஆலயங்களுக்குச் செல்லும் பக்தர்கள் கலாசார ஆடைகளை அணிவதைப் பெரிதும் தவிர்த்து வருகின்றார்கள்.

11. மேலும் சிகையலங்காரங்களில் கூட கலாசாரத்திற்குப் பிறழ்வான மாற்றங்களைப் பின்பற்றியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக மேலைத்தேசவர்களின் தலைமுடியின் நிறம் போலக் கீழைத்தேசத்தவர்களும் தமது கருமை முடியினை செயற்கை மருந்துவகைகளைப் பயன்படுத்தி மாற்றியமைத்து வருகின்றனர்.

12. உலகமயமாக்கலினால் தெய்வீக்கலைகளான இசைத்துறை, நடனத்துறையும் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளது. எமது பாரம்பரிய இசை கர்நாடக இசையாகும். ஆனால் உலகமயமாக்கலினால் பொப்பிசை பெரிதும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. அதேபோன்று நடனக்கலையிலும் இன்று பிறேக் டான்ஸ் பாரிய செல்வாக்கு செலுத்தியுள்ளது.

13. மேற்கத்தேய இசைக்கருவிகளின் வருகையினால் அவற்றின் விருப்பமும், பயன்பாடும் அதிகரித்துள்ளது. இதனால், உள்நாட்டு இசை, நடனக் கலைஞர்கள் மற்றும் உள்நாட்டு வாத்திய கருவிகளின் செல்வாக்குக் குறைந்து செல்கின்றது.

14. இன்ரநெற், தொலைபேசி, தொலைக்காட்சி என்பவற்றின் ஊடாகத் திரைப்படங்கள், தொடர்நாடகங்கள் என்பன விரைவாக பரப்பப்படுவதினால் பாரம்பரிய நாடகம், கூத்துப் போன்ற கிராமியக் கலைகளில் மக்கள் அதிக விருப்பம் செலுத்துவதில்லை. ஒவ்வொரு தேசங்களுக்கும் கலாசாரத்திற்கும் எனச் சுதேச இசைவடிவங்கள், கலைகள், விளையாட்டுக்கள், உணவு, உடை, பழக்கவழக்கங்கள் என்பன காலம்காலமாக இருந்து வருகின்ற போதிலும், இளைய சமுதாயம் துள்ளிசைப் பாடல்கள், மேசைப்பந்து, கிரிக்கெட், உதைபந்து, போன்ற உலகமயமாக்கல் கலாசாரங்களை அதிகம் விரும்புகின்றனர்.

15. உலகமயமாக்கலின் பின்னணியில் கொண்டுவரப்பட்ட மேலைத்தேசக் கலாசார மாற்றங்கள் எமது இளம் சந்ததியினரைத் தங்கிவாழும் சமூகமாக மாற்றியமைத்ததுடன், பாரிய கலாசாரச் சீரழிவுகளை ஏற்படுத்தி எயிட்ஸ் போன்ற

கொடிய நோய்களையும் சமூகத்தில் உண்டாக்கி வலுவிழந்த சமுகக்கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

16. உலகமயமாக்கலினால் சட்டவிரோத ஆயுதபாவனை, போதை வஸ்துப்பாவனை, கறுப்புபணம், கடத்தல் போன்ற பாரியளவிலான குற்றச்செயல்களுக்குரிய கதவுகள் திறக்கப்பட்டது.

17. இன்று திருமணத்தில் சடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது களியாட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நிலை காணப்படுகின்றது. குறிப்பாக, புகைப்படம், வீடியோ எடுத்தல், விருந்தோம்பல், போன்ற நிகழ்வுகள் சமயக் கிரியைகளைப் பின்தள்ளுகின்றது. முன்னைய காலங்களில் சிவாச்சாரியார்கள் ஊர்ப்பெரியவர்கள், அறிவுடையோர் முன்நிகழ்த்தி வைத்த திருமணம் இன்று வீடியோ எடுப்பவராலேயே நடாத்தப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது. திருமணங்களில் முன்னைய காலங்களில் போலல்லாது தற்பொழுது மணமகன், மணமகள் அலங்காரம் மாற்றமடைந்துள்ளது. சினிமா மோகத்தில் மூழ்கியுள்ள இளம்சமுதாயம் நடிப்பிற்காக அணியும் ஆடைகளைத் திருமணத்திற்கு அணியும் நிலை காணப்படுகின்றது.

18. பெரும்பாலான அபரக்கிரியைகள் சமய விதிமுறைகளை தாண்டிச் செயற்படுகின்றன. பொருளாதார பலத்தைக் காட்டுவதற்குப் ‘பாண்ட்வாத்திய இசைக்குழுவை’ அழைப்பதும், வானவேடிக்கைகளைச் செய்வதும், குளிர்பானம் கொடுப்பதும் அவதானிக்க முடிகிறது. மண்டபங்களில் நிகழ்வுகளை நடாத்துவது, ஒருவருக்குப் பயன்படுத்திய கிரியைப் பொருட்களை மற்றவர்களுக்கும் பயன்படுத்துவது, அபரக்கிரியை செயற்பாடுகளைச் செய்யும் ஒருசிலர் மது அருந்துவது போன்ற நிகழ்வுகள் மனிதமனங்களைப் புண்படுத்திக்கொள்ளும் களியாட்டச் செயற்பாடுகளாகும்.

## முன்னெடுப்புக்கள்

1. நவீன கால மாற்றத்திற்கு ஏற்ற வகையில் இந்துமதக் கருத்துக்கள். வாழ்வியல் சிந்தனைகள் யாவும் நவீன, விஞ்ஞானக் கொள்கையுடன் இணைந்த வகையில் செயற்படுதல் வேண்டும்.

2. இந்து சமய நம்பிக்கைகளை மேம்படுத்தும் வகையிலும். சிறந்த ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றை வலுப்படுத்தும் நோக்கிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், ஆன்மீகச் சொற்பொழிவுகள் மற்றும் சமய பயிற்சிப்பட்டறைகள் போன்றவற்றை நடாத்துதல் வேண்டும்.

3. ஆலயங்கள் 'சமுதாய மையங்கள்' என்பதனைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் அவசியமாகும். அதாவது, வழிபாட்டுத் தலங்களாக மட்டுமன்றிச் சமுகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் ஒரு நிறுவனமாக வளரவேண்டும்.

4. உடல் தகனத்தின் போது சூழலுக்கு ஊறுவிளைவிக்கும் ரயர் போன்ற எரிபொருட்களைப் பயன்படுத்துவதும், இன்று சூழலை அச்சுறுத்தும் 'சொப்பிங்பை'', ''பிளாஸ்ரிக்'' போன்றவற்றைப் பயன்படுத்துவதையும் தடுத்தல் வேண்டும். மயான வளவுக்குள் எவரும் மதுபோதையில் வருவதைத் தடைசெய்வதுடன், அவ்வாறு வருபவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

5. சமயக்கல்வியைப் பாடசாலையில் கற்பிப்பதாலோ அன்றி ஒழுக்கத்தை போதிப்பதாலோ மாத்திரம் மாணவர்களைச் சமயவயப்படுத்த முடியாது. கற்பித்தல் சிறப்படைவதற்கு ஆசிரியர் கற்பித்தல் செயற்பாடு சிறப்பிடம் பெறவேண்டிய அதேவேளை மாணவரது சமய ஈடுபாடும், கற்றல் ஆர்வமும், எதிர்பார்க்கவேண்டிய ஒன்று. அதுமட்டுமல்லாது மாணவர் களுடைய ஆத்மிக வளர்ச்சியில் பெற்றோர், உறவினர்கள் அவர்கள் வதியும் சமூகத்தில் வாழ்வோர் மற்றும் ஆலயங்கள், சமயநிறுவனங்கள், சமயப்பெரியார்கள், அறநெறிப் பாடசாலைகள் ஆகிய அனைவரும் பங்கெடுத்துக்கொள்ளும் போதுதான் மாணவர்கள் மேன்மையடைவார்கள்.

6. இணையத்தின்மூலம் சமயக்கருத்துக்கள் பரவவேண்டும். இணையத்தில் வெளிவரும் நவீன சக்திகளால் பாதிக்கப்படும் இளம் சமுதாயத்தினரைக் காப்பாற்றும் வகையில் இணையத்தில் இந்துசமய அறிவுத்தளங்கள் பெருக வேண்டும்.

7. சமய வாழ்வு பலத்தையும், விடுதலையையும் அளிக்கின்றது. வாழும் நாள் அளவிட்டுக் கூறமுடியாதாயினும் வாழும்வரை நல்வழியில் கழிப்பதே அறிவுக்கு உகந்ததாகும் என்பதனை

அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். இக்கருத்துக்களை இளைஞர்கள் மனதில் நிலைநிறுத்துவது காலத்தின் தேவையாகும்.

8. ஆறுமுகநாவலர் 'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் இன்ன காலத்தில் இந்த சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்' என்று குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்லாது அன்று விவேகானந்தர் கூறிய அறைகூவலான 'எனது இளைஞர்களே! வேலையைச் செய்யத் தொடங்குங்கள். அதற்கான வேகத்தீ உங்களை வந்தடையும். வாழ்நாள் குறுகிய அளவானது. பெரும்காரியம் ஒன்றின் பொருட்டு அதைத் தியாகம் செய்துவிடுவீர்களாக! பணிபுரிவீர்களாக! என்று கூறியது இன்றைய இளைய தலைமுறையினருக்கும் உயிர்துடிப்புள்ள வேண்டுகோலாக அமைகின்றது.

9. உலகமயமாக்கலினால் தடுமாறிக்கொண்டிருக்கும் இளம் தலைமுறையினரே வருங்காலச் சமுதாயத்தை உருவாக்க வேண்டியவர்கள். அவர்களுக்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மனப்பாங்கு உருவாக வேண்டும். 'ஒன்றே குலம். ஒருவனே தேவன்' என்ற உயர்ந்த நோக்கு ஏற்பட வேண்டும். 'எவ்வுயிரும் தன்னுயிர் போல எண்ணி இரங்கும் அருள்நெறி' தோன்ற வேண்டும். மனிதன் மனிதானக வாழவேண்டுமாயின் சமயம் அவசியம் என்பதை இளம் சமுதாயம் உணரவேண்டும். அதுதான் சுவாமி விவேகானந்தரும், 'சமயத்தைச் சமுதாயத்திலிருந்து எடுத்துவிட்டால் மிஞ்சுவது காட்டுமிராண்டிகளின் கூட்டமே' என்கின்றார். இதை இளம் சமுதாயம் உணர்ந்து செயல் வடிவம் கொடுப்பது காலத்தின் தேவையாகும்.

## நிறைவுரை

உலகமயமாக்கலின் பின்னணியில் ஏராளமான நல்ல விடயங்கள் கட்டியெழுப்பப்பட்டபோதும் பல நன்மைதராத விடயங்களும் இடம்பெறுகின்றன என்பதும், இந்து ஆலயங்கள், இந்துசமயக்கல்வி, இந்துவாழ்வியல் என்பன சவால்களை எதிர்நோக்கியுள்ளன என்பதையும் இவ்வாய்வின் மூலம்

அறியமுடிகின்றது. இன்று நவீன உலகத்திற்கும் மதமாற்றத்திற்கும் இடையில் வாழ்ந்து வருகின்ற இளம்சமுதாயத்தினரைச் சிறந்த இந்து சமய விழுமியப் பண்புள்ளவர்களாக உருவாக்கவேண்டிய தேவை உள்ளது. ஆதலால் உலகமயமமாக்கலினால் இந்து சமயம் எதிர்நோக்குகின்ற சவால்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவது காலத்தின் தேவையாக உள்ளது. ஆகவே உலகமயமாக்கல் செயற்பாட்டில் காலமாற்றத்திற்கு ஏற்றவகையில் இந்துசமயம் நல்லவிடயங்களை உள்வாங்கித் தீமைதரும் விடயங்களைக் களைந்தெறிந்து நிலைத்திருக்கும் அபிவிருத்தியை நோக்கியதாகக் கட்டமைக்கப்படுவதற்கு இவ்வாய்வு வழிசமைக்கின்றது.

### அடிக்குறிப்புகள்

1. Stert 1983 Religious studies made simple book London P 131
2. இந்திரபாலா, கா. 1978, ஆதிஇலங்கையில் இந்துமதம், ஐயரத்தினம் உருவச்சிலை திறப்புவிழா சிறப்பு மலர், தெல்லிப்பழை ப. 15.
3. பக்தவத்சலபாரதி, 2003, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். ப. 10.
4. Radhakrishanan, s., The Hindu view of life, George Allen and Unwin LTD, londan, P. 15.
5. http://www. **Statistics.** gov. lk & Department of Census and Statistics
6. Doshi, S. L., 2006 Modernity Post Modernity & Neo – Sociological Theories, P. 364.
7. மான்பிரட் பீ. ஸ்டெக்கர், பூரணச்சந்திரன், க. (தமிழ் மொழிபெயர்ப்பு), உலகமயமாக்கல். ப. 13
8. மேலது, ப. 14
9. Gourevitch. P Bohn 2000 Globalization of Production; Insights from the Hard Disk Drive Industry, World Development 2000, Vol-28-No-2, P 314.
10. மான்பிரட் பீ. ஸ்டெக்கர், பூரணச்சந்திரன், க. (தமிழ் மொழிபெயர்ப்பு), உலகமயமாக்கல். பக். 85-86.
11. மேலது ப. 89.
12. ஜோன்ராஜன், எஸ் 'இந்துக்களின் தேசமாக மாறும் அமெரிக்கா', வீரகேசரி 15. 11. 2009.

13. செல்வின் இரேனியஸ், பிரேமாவதி, எமது சமூகத்தின் சமகாலச்சவால்களும் கல்வியும், 24. 06. 2011, யாழ் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுனர் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை நினைவுப்பேருரை 2011, . ப. 13